செ.வெ.எண்:39/ஜூன் நாள்: 17.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சமூகநலத்துறையின் சார்பாக வரதட்சணை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பயிலரங்கம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (17.06.2016) சமூகநலத்துறையின் சார்பாக வரதட்சணை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பயிலரங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கருத்தரங்கை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நமது நாட்டில் குழந்தைத் திருமணம் மற்றும் வரதட்சணை கேட்டு பெண்கள் கொடுமைப்படுத்தப்படுவது, பாலியல் கொடுமைகள் முதலான பெண்களுக்கான எதிரான வன்முறைகள் இன்றளவும் ஆங்காங்கே நடைபெற்ற வண்ணம் உள்ளன. 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு திருமணம் செய்து கொடுப்பது சட்டப்படி குற்றமாகும். வரதட்சணை கேட்பதும், வரதட்சணை கொடுப்பதும் சட்டத்திற்கு புறம்பானதாகும். பல பெண்கள் வரதட்சணைக் கொடுமையினால் சமுதாயத்தில் இழிநிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்த வரதட்சணைக் கொடுமையினால் பெண்கள் தற்கொலை செய்தல், கொலை செய்யப்படுதல், பிறந்த வீட்டிற்கு துரத்தப்படுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடக்கின்றன. வரதட்சணையை ஒழிப்பதற்காக இந்திய அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. "பெண் கல்வியானது உயரிய நிலையை அடையும்போது வரதட்சணைக் கொடுமை உள்ளிட்ட சமுதாய சீர்கேடுகள் களையப்படும்". ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். பெண்களின் சிறப்பை மேம்படுத்தும் விதமாக ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும் பெண்களுக்கென்று தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களாக மகளிர் எழுத்தறிவுத் திட்டம், தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் வகையில் 13 அம்ச திட்டம், 24 மணி நேரம் மகப்பேறு மருத்துவ சேவை அளிக்கும் திட்டம், ஏழைப்பெண்களின் திருமணம் ஏழ்மையின் காரணமாக தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காகவும், பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகவும் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு 8 கிராம் தங்கத்துடன் கூடிய திருமண நிதியுதவித்திட்டம், பெண்களின் பொருளாதார நிலையை தாங்களே உயர்த்திக் கொள்ளும் வகையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைத்து மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கும் திட்டம், கிராமப்புற பெண்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றது. எனவே பெண் கல்வியின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு பெண் குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பி, கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் என்ற இலட்சிய உணர்வோடு செயல்பட்டால் இத்தகைய சமுதாய சீர்கேட்டினை களையலாம். "பெண்கள் நாட்டின் கண்கள்" எனும் நோக்கில் இன்றைய சமுதாயத்தில் வாழ்க்கை முறையை மாற்றி வாழ கற்றுக் கொண்டால் இது போன்ற பல்வேறு சமுதாய வன்முறைகளுக்கு தீர்வு காணலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.சி.குணசேகரி, கீழக்கரை தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி.பெ.கிருஷ்ணவேணி, மாவட்ட திட்ட அலுவலர் (ஒ.கு.வ.தி) திருமதி.ஆ.சகுந்தலா உட்பட குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வலர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**